[திரு. துரைமுருகன்] [2013 ஏப்ரல் 5

பிரிக்கவில்லை. எந்த விவசாயியாக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், விவசாயிகளுக்கு ஒட்டுமொத்தமாக நன்மை செய்யவேண்டும் என்பதற்காக அறிவிக்கப்பட்ட ஒரு நலத் திட்டம் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் மூத்த உறுப்பினர், ஜனநாயகத்தின்மீது நம்பிக்கையுள்ளவர்கள், கடன் தள்ளுபடி செய்கிறார்கள் என்றால், ஒரு ஏழை, குறு விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்தால் சரி. பண்ணையார்களுக்கும், மன்றாடியார்களுக்கும், பணக்காரர்களுக்கும் தள்ளுபடி செய்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதே மாதிரி, எவ்வளவு தள்ளுபடி செய்தார்கள், அந்தக் கடன் தள்ளுபடி பயன் யார் யாருக்குப் போய் இருக்கிறது என்பதை திங்கட்கிழமை அன்று உங்களுக்கு நான் விளக்கமாக, தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, அவ்வளவுதான் விடுங்கள். (குறுக்கீடு) மற்ற உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். அவர் பேசட்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அனைத்து விவசாயிகளுடைய கடனையும் தள்ளுபடி செய்வோம் என்று தேர்தல் வாக்குறுதியிலே சொன்னார்கள். அந்த வாக்குறுதியைத்தான் நாங்கள் நிறைவேற்றினோம். அப்பொழுது இன்றைய முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'எப்படி ரூ.7,000 கோடிக் கடனைத் தள்ளுபடி செய்ய முடியும்? உலக வங்கி ஒத்துக்கொள்ளாது' என்று சொன்னவர்கள்தான் அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, இலவச மின்சாரம் பெறுவதற்காக தமிழகத்திலே இருக்கிற விவசாயிகள் எத்தனை போராட்டங்கள், எத்தனை உயிர்ச் சேதங்களைக் கொடுத்துப் போராடினார்கள்? ஆனால் விவசாயிகளுக்கு 1989 ஆம் ஆண்டில் இலவச மின்சாரம் கொடுத்த தலைவர். . .

2013 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1-05

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வரலாற்றை மறந்துவிட்டு சொல்லக்கூடாது. உங்களுடைய தலைவர் முதல்வராக இருந்தபோதுதான் கோயம்புத்தூரிலே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு, பல விவசாயிகள் கொலை செய்யப்பட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)* இருங்கள், மின் துறை அமைச்சர் பேசட்டும். *(குறுக்கீடுகள்)* அவர் பேசட்டும். அவர் பேசி முடித்த பிறகு பேசலாம், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* அமைச்சர் பேசி முடித்த பிறகு பேசலாம், உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: நான் சொல்லிவிடுகிறேன். *(குறுக்கீடுகள்)* நான் ஒரே ஒரு விஷயம் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. தலைவர் மரியாதைக்குரிய திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், திண்டுக்கல் மாவட்டத்திலேயே, உயர்த்தப்பட்ட ஒரு பைசா மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்று போராடியதற்காக 16 உயிர்களை சுட்டுப் பொசுக்கியவர், திண்டுக்கல் மாவட்டத்திலேகூட ஒருவர் இறந்தார். *(குறுக்கீடுகள்)* ஆகவே, மின் கட்டணத்தை. . . *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். அவருக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன் அல்லவா? *(குறுக்கீடுகள்)* அவர்தானே பேசிக்கொண்டிருக்கிறார்? நீங்கள் எதற்காகப் பேசுகிறீர்கள்? அமைச்சர் பேசி முடித்த பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 5

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: உயர்த்திய மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டி போராடிய விவசாயிகள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, பல உயிர்களை பலியாவதற்குக் காரணமாக இருந்தவர் உங்கள் தலைவர்.

அதோடு ஒன்றே ஒன்று சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கவனிக்க வேண்டும். மாண்புமிகு தி.மு.க. கட்சித் தலைவர் அவர்களுக்கு ஒரு சின்ன பரிந்துரையை நான் செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் ஏதோ கட்சி மாறி வந்துவிட்டார். திரும்பவும் தி.மு.க.-வுக்கு வந்ததனால், தன்னுடைய நம்பகத்தன்மை கெட்டுவிடுமோ என்பதற்காக, அதை உறுதிப்படுத்துவதற்காக படாத பாடுபடுகிறார். அவரைக் கொஞ்சம் அங்கீகரித்துக்கொள்ளுங்கள். பாவம், அங்கேயிருந்து எதற்கெடுத்தாலும் முந்திரிக்கொட்டை மாதிரி முந்தி, அங்கே பிரச்சினையை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறார். அவரை கொஞ்சம் அங்கீகரித்துக்கொள்ளுங்கள். அவர் உங்கள் அங்கீகாரம் பெறுவதற்காகப் படாத பாடுபடுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது கொலை நடந்தது என்றார். ** ஒரு பைசாகூட விவசாயி கரண்ட் பில் கட்டக்கூடாது என்று உத்தரவிட்டவர் எங்கள் முதல்வர் கலைஞர் அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் வந்த பிறகு இதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை இரத்து செய்தார்கள். ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் தோற்ற பிறகு மறுபடியும் அதைக் கொண்டுவந்தார்கள். கரண்ட் பில்லை இரத்து செய்ய வேண்டுமென்று கொண்டுவந்த நேரத்தில்--மாண்புமிகு திரு. பன்னீர்செல்வம் இங்கு உட்கார்ந்திருக்கிறார்கள்--இதே அவையிலே நான் பேசினேன். இலவச மின்சாரத்தை இரத்து செய்யாதீர்கள், தொடருங்கள் என்று நான் அன்றைக்குப் பேசிய பேச்சு இன்றைக்கும் இருக்கிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கருத்து தவறானது. அதை அனுமதிக்க முடியாது. இலவச மின்சாரம் ஒருபோதும் இரத்து செய்யப்படவில்லை. முதலில் இந்தமாதிரி கோயபெல்ஸ் பிரச்சாரத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். அது அடிப்படையிலேயே தவறான கருத்து. இலவச மின்சாரத்தை இரத்து செய்ய வேண்டுமென்று அம்மா அவர்கள் எப்போதுமே சொன்னதில்லை. ஆனால், நீங்கள் வரலாற்றை மறைத்துவிட முயற்சிக்கலாம். மக்கள் அதை மறக்கவில்லை. திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் அப்பொழுது விவசாய சங்கத் தலைவராக இருந்தபோது, நீங்கள் விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை உயர்த்தியபோது அதை எதிர்த்துப் போராடிய நாராயணசாமி நாயுடு அவர்களின் போராட்டத்தை நசுக்குவதற்காக துப்பாக்கிச் சூடு நடத்தி எங்கள் மாவட்டத்திலே நொச்சியோடைப்பட்டி கிராமத்திலே ஒருவர் இறந்து, அங்கே இன்றைக்கும் நினைவுத் தூண் இருக்கிறது. உங்கள் ஆட்சியிலே விவசாயிகளுக்கு உயர்த்திய மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்காகப் போராடியவர்களைச் சுட்டுப் பொசுக்கியதற்கான நினைவுத் தூண் என்றுகூட இன்றைக்கும் அங்கே இருக்கிறது. அவர் போய் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார். ஓட்டன்சத்திரத்திலேயும் போராட்டம் நடத்தியபோது அங்கே பல உயிர்கள் சாகடிக்கப்பட்டன. கொடூர கொலைக் குற்றம் சுமத்தக்கூடிய அளவுக்கு விவசாயிகளைக் கொன்று குவித்தவர்கள் நீங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது ** என்று குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு இ. பெரியசாமி அவர்கள்.

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் சில விவரங்களைச் சொல்லியிருக்கிறார். 1978-ல் எந்த ஆட்சி இருந்தது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.